தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, மார்கழி 20, திருவள்ளுவர் ஆண்டு 2049

2019 ஜனவரி 4, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்."

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால், அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

வனவியல் கல்லூரி

***34926—திரு. எ.பி. சக்திவேல்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் தெற்கு தொகுதியில் வனவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியானது நகர்ப்புறப் பகுதியில் அமைந்துள்ளது. இந்தத் தொகுதியிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவில், 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குரும்பப்பட்டி வன மரபியல் ஆராய்ச்சி மையத்தில் (Forest Genetics Research Centre) முக்கியமாக சந்தன மரம், பெருமரம், மூங்கில் மரம் போன்ற மரங்களின் மரபு சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் தெற்கு தொகுதியில் தனியாக ஒரு வனக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ், வனப் பகுதியில் இலட்சக்கணக்கான மரக் கன்றுகளை நட்டு, வனத்தின் வலிமையை அதிகரித்து, மலைவாழ் இன மாணவ, மாணவிகளுக்கான உண்டி உறைவிடப் பள்ளிகளை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியிலே செயல்படும் வகையில், வன உயிரினங்களால் உயிரிழப்பு ஏற்படும்போது பொது மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.4 இலட்சமாகவும், வனக் காவலர்களுக்கு ரூ.10 இலட்சமாகவும் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும், பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய உங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சேர்வராயன்மலை, கல்வராயன்மலை, வெள்ளிமலை மற்றும் ஜருகுமலை ஆகிய மலைப் பகுதிகளை உள்ளடக்கியது. இந்த மலைகளிலே அடர்ந்த வனங்களும், மலைவாழ் இன மக்கள் அதிகம் வாழ்கின்ற அதிக ஊர்களும் உள்ளடங்கியிருக்கின்றன. நகர்ப்புறத்தினை எடுத்துக்கொண்டோமானால், கந்தகிரி, குமரகிரி,

2019 ஜனவரி 4]

ஊத்துமலை மற்றும் கரியபெருமாள் கரடு, நாமமலை போன்ற சிறு குன்றுகள் உள்ளடங்கியிருக்கின்றன. எனது தொகுதி நகர்ப்புறமாக இருந்தபோதிலும்கூட, கிராமப்புற, நகர்ப்புற மலைவாழ் இன மக்களின் பிள்ளைகள், மாணவ, மாணவியர்கள் உயர் கல்வி பெறுவதற்காக வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். எனவே, நகர்ப்புறங்களிலே, இந்த சிறு குன்றுகளிலே இருக்கின்ற வனத் துறைக்குச் சொந்தமான இடங்களிலே, கலை மற்றும் அறிவியல் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்காக அரசு முன்வருமாயின், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நிலத்தினை அளிப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக கலைக் கல்லூரி துவங்குவதற்கு நிலம் ஒதுக்கக்கோரும் பகுதியில் காப்புக் காடுகளோ, காப்பு நிலங்களோ இருப்பின், அதற்கான உரிய கருத்துருவை இணையதளத்தின்மூலம் பயனீட்டாளர்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும். அதாவது, உயர் கல்வித் துறை மற்றும் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் கருத்துருவினை இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அனுமதி வழங்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள். அவ்வளவுதானா?*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*